


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், செப்டம்பர் 01, 2026 | இதழ் 141

# இனி 1 லிட்டர் ரூ.44. பால் கொள்முதல் விலை மேலும் ரூ.3 உயர்வு, சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவிப்பு




சென்னை, 01 செப்டம்பர் 2026: பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் பால் கொள்முதல் விலையை மேலும் 3 ரூபாய் உயர்த்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ், முதலமைச்சர் ஜோசப் விஜய் இன்று அறிவித்தார்.

இதுபற்றி முதலமைச்சர் விஜய் சட்டசபையில் கூறியிருப்பதாவது:

பால் உற்பத்தி, கிராமப்பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கியப் பங்கு வகிப்பதனையும் கருத்தில் கொண்டு கிராம அளவில் உள்ள தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் வழங்கும் 3 லட்சத்து 16 ஆயிரத்திற்கும் மேலான பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு கூட்டுறவு சங்கம் மூலமாக 1 ரூபாய் உயர்த்தவும், மேலும், அரசு ஊக்கத் தொகை 3 ரூபாயிலிருந்து 5 ரூபாயாக உயர்த்தவும் முடிவு செய்து ஆக மொத்தம் ஒரு லிட்டர் கொள்முதல் விலை 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக உயர்த்தி 19.8.2026 அன்று சட்டமன்ற பேரவையில் அறிவித்தோம்.

இந்தச் சூழ்நிலையில், கறவை மாடுகளுக்கான பசுந்தீவனம், உலர் தீவனம், தவிடு, புண்ணாக்கு ஆகியவற்றின் விலை மற்றும் இதர இடுபொருட்களின் விலை ஆகியவை மிகவும் உயர்ந்துள்ளதைத் தெரிவித்து, பால் கொள்முதல் விலையை மேலும் உயர்த்தித்தர வேண்டும் என்று பல்வேறு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்கள் அரசுக்குக் கோரிக்கையை வைத்துள்ளனர்.

### 1 லிட்டர் ரூ.44

எனவே, பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலனை செய்து நமது அரசு, பால் உற்பத்தியாளர்கள் பயனடையும் வகையில் பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 38 ரூபாயிலிருந்து 41 ரூபாயாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மேலும் 3 ரூபாய் உயர்த்தி 44 ரூபாயாக வழங்கவும் தற்போது அரசு முடிவு செய்துள்ளது.

நமது அரசு, பால் உற்பத்தியாளர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டு இந்த முடிவினை எடுத்துள்ளது. மேலும், பால் கொள்முதல் விலை உயர்வினால் ஏற்படும் செலவினத்தை ஆவின் நிறுவனத்திற்கு அரசு ஈடு செய்த வழங்கும்.

இந்த கொள்முதல் விலை உயர்வால் கூடுதலாக மொத்தம் ஒரு மாதத்திற்கு ரூபாய் 60 கோடியும், ஒரு ஆண்டிற்கு ரூபாய் 720 கோடியும் செலவாகும். இவ்வாறு முதலமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

# மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுக்க புதுச்சேரி சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் ரங்கசாமி



சென்னை, 01 செப்டம்பர் 2026: மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுக்க வலியுறுத்தி புதுச்சேரி சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் ரங்கசாமி. கர்நாடக அரசின் நடவடிக்கைகளுக்கு கண்டனத்தை பதிவு செய்து, இது புதுச்சேரி மாநில மக்களின் நலனுக்கு எதிரானது எனவும் பதிவு செய்தார்.

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவதை தடுக்க வலியுறுத்தி புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதுச்சேரி முதலமைச்சர் ந. ரங்கசாமி இந்த அரசுத் தீர்மானத்தை அவையில் முன்மொழிந்தார். காவிரியின் குறுக்கே மேகதாதுவில் புதிய அணை கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசின் ஒருதரப்பான நடவடிக்கைகளுக்கு இத்தீர்மானம் மூலம் கடும் கண்டனம் பதிவு செய்யப்பட்டது.

மேகதாதுவில் அணை கட்டப்பட்டால் காவிரி டெல்டாவின் கடைமடைப் பகுதியான புதுச்சேரியின் காரைக்கால் மாவட்ட விவசாயிகளும் பொதுமக்களும் மிகக் கடுமையான பாதிப்புக்கு உள்ளாவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. கர்நாடகாவின் இந்த அணை கட்டும் முயற்சி புதுச்சேரி மாநில மக்களின் ஒட்டுமொத்த நலனுக்கும் எதிரானது எனத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

முன்னதாக, இக்கூட்டத்தொடரில் மேகதாது அணைக்கு எதிராகத் தனிநபர் தீர்மானம் கொண்டுவர திமுக எம்.எல்.ஏ கார்த்திகேயன் அனுமதி கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது முதலமைச்சர் ரங்கசாமி கொண்டு வந்த இந்த அரசுத் தீர்மானம் அனைத்துக் கட்சி உறுப்பினர்களின் ஆதரவோடு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

# 18 தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனங்களின் மாணவர்களுக்கு குடியரசுத்தலைவர் பட்டங்களை வழங்கினார்




சென்னை 01, செப்டம்பர் 2026: புதுதில்லியில் இன்று நடைபெற்ற 18 தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒருங்கிணைந்த பட்டமளிப்பு விழாவில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் தலைவர், ஜவுளி, ஆடை உற்பத்தித் துறைகள், நமது கலாச்சார பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக மட்டுமின்றி, லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்திற்கு அடித்தளமாகவும் உள்ளது என்று கூறினார்.

பாரம்பரிய கைவினைஞர்களுக்கு ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கப்படும் போது, அது அவர்களுடைய அடுத்த தலைமுறையினரை இந்தத் தொழில்களில் பெருமையுடனும், நம்பிக்கையுடனும் ஈடுபட ஊக்குவிக்கும் என்று தெரிவித்தார்.

ஜவுளி, ஆடை உற்பத்தித் துறையில் உள்ள நவீன தொழில்நுட்பங்களை அப்பகுதிகளில் உள்ள நெசவாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தவும் அவர்களை சந்தைகளுடன் இணைக்கவும், கைவினைத் தொகுப்பு முன்முயற்சி போன்ற திட்டங்களை பல்வேறு தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப நிறுவனங்கள் செயல்படுத்தி வருவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது, நமது நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் பெரும் நம்பிக்கையுடன் உலகளவில் தமது பங்களிப்பை விரிவுபடுத்தி வருகிறது என்று குடியரசுத் தலைவர் தெரிவித்தார். உலக அளவில் இந்தியாவின் நிலையை மேம்படுத்துவதில் ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பத் துறைக்கு பெரும் சாத்தியக்கூறு உள்ளதாகக் கூறினார்.

எனவே பட்டம் பெறும் மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

# கிர்கிஸ்தான் அதிபருடன் பிரதமர் நரேந்திர மோடி இருதரப்புப் பேச்சுவார்த்தை



சென்னை 01, செப்டம்பர் 2026: பிரதமர் திரு நரேந்திர மோடி, நேற்று (2026 ஆகஸ்ட் 31) பிஷ்கெக்கில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டிற்கு இடையே, கிர்கிஸ்தான் அதிபர் திரு சாதிர் ஜபரோவ்-வைச் சந்தித்தார்.

கிர்கிஸ்தான் சுதந்திர தினத்தை முன்னிட்டு, பிரதமர் அந்நாட்டு அதிபர் திரு ஜபரோவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். அதே நாளில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டின் தொடக்கம் அமைந்துள்ளது ஒரு சிறப்பான அம்சம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், 26-வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவதற்காகவும் அவர் அந்நாட்டு அதிபர் திரு ஜபரோவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். இரு தலைவர்களும் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்ததுடன், இந்தியாவுக்கும், கிர்கிஸ்தானுக்கும் இடையேயான உத்திசார் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினர். இரு பொருளாதாரங்களுக்கு இடையேயான பரஸ்பர தன்மைகளைக் கருத்தில் கொண்டு, பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்த அவர்கள் ஒப்புக்கொண்டனர். மாணவர் பரிமாற்றங்கள், கலாச்சார ஒத்துழைப்புகள் உள்ளிட்டவற்றின் மூலம் மக்களிடையே உறவுகளை வளர்ப்பது குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

கிர்கிஸ்தான் தலைமையில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கூட்டங்களில் இந்தியாவின் 'லுவான பங்கேற்பை பிரதமர் எடுத்துரைத்தார். இது, இரு நாடுகளுக்கும் இடையேயான நெருங்கிய, நீண்டகால உறவுகளின் பண்புகளான பரஸ்பர மரியாதை, நம்பிக்கை, ஆதரவு ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாக அவர் மேலும் கூறினார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்காகவும், அன்பான உபசரிப்புக்காகவும் கிர்கிஸ்தான் அதிபர் திரு சாதிர் ஜபரோவுக்குப் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.



## இளம் இந்திய செஸ் ஆர்வலர்களுக்கு உலகின் நம்பர் 1 மேக்னஸ் கார்ல்சனை எதிர்த்து விளையாடும் வாய்ப்பு

சென்னை 01, செப்டம்பர் 2026: யிப்பீ! மற்றும் அல்ஃபைன் ஏபிஎல் பைப்பர்ஸ் இணைந்து நடத்தும் கோக், ஷேர். செக்மேட்! போட்டி மூலம் பெங்களூரு மற்றும் சென்னையைச் சேர்ந்த 25 இளம் செஸ் வீரர்களுக்கு, உலக செஸ் சாம்பியன்களுடன் நேரடியாக விளையாடும் அரிய வாய்ப்பு கிடைக்கிறது. இதில் உலகின் நம்பர் 1 வீரரும் ஐந்து முறை உலக சாம்பியனுமான மேக்னஸ் கார்ல்சன், இந்திய செஸ் நட்சத்திரம் கொனேரு ஹம்பி மற்றும் வளர்ந்து வரும் இளம் நட்சத்திரம் திவ்யா தேஷ்முக் ஆகியோருடன் சந்தித்து, உரையாடி, செஸ் விளையாடும் வாய்ப்பும் அடங்கும்.

கோக், ஷேர். செக்மேட்! போட்டி 13 முதல் 19 வயது வரையிலான, செஸ்.காம் அல்லது Lichess.org-ல் பதிவு செய்துள்ள பெங்களூரு மற்றும் சென்னை செஸ் வீரர்களுக்காக நடத்தப்படுகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்க, இளம் செஸ் ஆர்வலர்கள் தங்களுக்குப் பிடித்த வகையில் யிப்பீ! நூடுல்ஸைத் தயாரித்து, அதனுடன் தங்களின் மறக்க முடியாத, பரபரப்பான அல்லது எதிர்பாராத செஸ் அனுபவத்தைப் பகிர வேண்டும். இதில் தேர்வு செய்யப்படும் 25 வெற்றியாளர்களுக்கு சாம்பியன்களை நேரில் சந்தித்து, அவர்களுடன் உரையாடி, செஸ் விளையாடும் பிரத்யேக அனுபவம் கிடைக்கும்.




பங்கேற்பாளர்கள் அதிகாரப்பூர்வ போட்டிப் படிவத்தைப் பூர்த்தி செய்து, தாங்கள் தயாரித்த யிப்பீ! உணவின் புகைப்படம் அல்லது வீடியோ, செஸ்.காம் அல்லது Lichess.org சுயவிவர விவரங்கள் மற்றும் தங்களின் செஸ் அனுபவத்தைப் பகிரலாம். போட்டி ஆகஸ்ட் 26 முதல் செப்டம்பர் 2, 2026 வரை நடைபெறுகிறது. பதிவுகளை செப்டம்பர் 2, 2026 அன்று மதியம் 12 மணி ஐஎஸ்டி வரை சமர்ப்பிக்கலாம். வெற்றியாளர்கள் பிரத்யேக செஸ் அனுபவத்திற்கு முன்பாக அறிவிக்கப்படுவார்கள்.

செஸ் விளையாட்டைத் தாண்டியும், வெற்றியாளர்கள் தங்களின் சொந்த யிப்பீ! படைப்புகளை தயாரித்து, சாம்பியன்களுடன் சூடான நூடுல்ஸ் பகிர்ந்து சாப்பிடுவதோடு, செஸ் மீதான தங்களின் ஆர்வத்தைப் பற்றிய கதைகளையும் பகிர்ந்து கொள்ளலாம்.

இந்த முயற்சி குறித்து அட்ல் புஜார், மார்க்கெட்டிங் பிரிவு தலைவர், ஸ்நாக்ஸ் & நூடுல்ஸ், ஃபுட்ஸ் டிவிஷன், ஐடிசி லிமிடெட். கூறுகையில், இளைஞர்களை மையமாகக் கொண்ட பிராண்டாக யிப்பீ! தொடர்ந்து விளையாட்டுத் துறைக்கு ஆதரவளித்து, இந்தியாவின் இளம் திறமைகளை ஊக்குவித்து வருகிறது. அல்ஃபைன் ஏபிஎல் பைப்பர்ஸ் உடனான இந்த இணைப்பின் மூலம், செஸ்ஸை விரும்பும் இளம் வீரர்கள் உலகின் முன்னணி சாம்பியன்களுடன் நேரடியாக சந்தித்து, விளையாட்டை இன்னும் நெருக்கமாக அனுபவிக்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பை உருவாக்குகிறோம் என்றார்.

இந்த முயற்சி #பியாண்ட்திமூவ் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாகும். செஸ் போர்டில் நகர்த்தப்படும் ஒவ்வொரு காயின் பின்னாலும் இருக்கும் ஆர்வம், கதைகள் மற்றும் அனுபவங்களை இந்தப் பிரச்சாரம் கொண்டாடுகிறது.

## 16 பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களின் வருடாந்திர செயல்பாடு குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆய்வு செய்ய உள்ளார்

சென்னை 01, செப்டம்பர் 2026: புதிய உள்நாட்டு தொழில்நுட்பங்களை உருவாக்குதல், ஏற்றுமதியை அதிகரித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டும் வகையில், 16 பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்களின் வருடாந்திர செயல்பாடு குறித்த ஆய்வைப் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் 2026 செப்டம்பர் 1 அன்று புதுதில்லியில் மேற்கொள்ள உள்ளார்.

இந்நிகழ்வில், ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் நிறுவனம், மசகான் டாக் கப்பல் கட்டுமான நிறுவனம், பாரத் மின்னணு நிறுவனம், பாரத் டைனமிக்ஸ் நிறுவனம், கார்டன் ரீச் கப்பல் கட்டுமானர்கள் மற்றும் பொறியியலாளர்கள் நிறுவனம், பிஈஎம்எல், மிதானி ஆகிய 7 பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனங்களின் முதன்மை மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டு 2025 - 26-ம் நிதியாண்டின் அரசின் பங்கு மூலதனத்திற்கான ஈவுத்தொகைக் காசோலைகளை பாதுகாப்பு அமைச்சரிடம் வழங்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் தற்சார்பு இந்தியா பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்கள் - தற்சார்பை ஒட்டிய பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களின் பயணம், பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், நவீன உற்பத்தி செயல்முறைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பாதுகாப்புப் பொதுத்துறை நிறுவனங்களால் தொடங்கப்பட்ட திஷா எனும் முன்முயற்சி, ஹிந்துஸ்தான் ஏரோனாடிக்ஸ் நிறுவனத்தின் நவீனமயமாக்கலுக்கான திட்டம், உள்நாட்டுமயமாக்கலுக்கான திட்டம் ஆகிய 4 புத்தகங்களை திரு ராஜ்நாத் சிங் வெளியிட உள்ளார். 2025 - 26-ம் நிதியாண்டில் பாதுகாப்புத் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்பாடுகள் பாராட்டத்தக்க வகையில் இருந்தது. இதன் மொத்த வர்த்தகம் ரூ.1.29 லட்சம் கோடியாக இருந்தது. இது 2024 -



25-ம் நிதியாண்டை விட 15.4 சதவீதம் அதிகமாகும். 2025 - 26-ம் ஆண்டு பாதுகாப்புப் பொதுத் துறை நிறுவனங்களின் வரிக்குப் பிந்தைய மொத்த வரவு ரூ.23,136 கோடியாகும். இது அதன் முந்தைய ஆண்டைவிட 15.6 சதவீதம் அதிகமாகும். 2025 - 26-ம் ஆண்டில் பாதுகாப்புப் பொதுத் துறை நிறுவனங்களின் ஏற்றுமதி முந்தைய நிதியாண்டை விட, 151.2 சதவீதம் அதிகமாகும்.

## இந்தியாவிலிருந்து ஒரு சர்வதேச ஏஐ பிளாட்பார்ம்: ஸ்டுடியோக்கள், பிராண்டுகள், ஏஜென்சிகள் மற்றும் கிரியேட்டர்களுக்காக 'ஸ்பார்க் ஸ்டேஷன்' ஏஐ பிளாட்பாரத்தை அறிமுகப்படுத்துகிறது வெர்ஸே இன்னோவேஷன்!

சென்னை 01, செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னணி செய்தி நிறுவனமான டெய்லிஹண்ட் மற்றும் ஜோஷ் செயலிகளின் தாய் நிறுவனமான வெர்ஸே இன்னோவேஷன் நிறுவனம் 'ஸ்பார்க் ஸ்டேஷன்' என்ற புதிய ஏஐ பிளாட்பாரத்தை ஃபிலிம் எக்ஸ்போ 2026 நிகழ்வில் அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு ஐடியா உருவாவது முதல் அதன் ஃபைனல் கட் வரை வீடியோ தயாரிப்பின் அனைத்து வேலைகளையும் ஒரே இடத்தில் முடிக்கும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. இது வெர்ஸே நிறுவனத்தின் முதல் சர்வதேச தயாரிப்பு ஆகும்.

ஸ்பார்க் ஸ்டேஷன் என்பது கன்டென்ட் கிரியேட்டர்கள் எளிதாக வேலை செய்ய உதவும் ஒரு முழுமையான பிளாட்பாரம். ஐடியா யோசிப்பது, ஸ்கிரிப்ட் எழுதுவது, ஸ்டோரிபோர்டு, கேஸ்டிங், லொகேஷன், காஸ்ட்யூம், பல ஆங்கிள் ஷாட்கள், இசை, வசனம், எடிட்டிங் மற்றும் விளம்பர வடிவமைப்பு என வீடியோ தயாரிப்பின் அத்தனை வேலைகளையும் ஒரே சிஸ்டத்தில் முடித்துக்கொள்ளலாம். பல சிறந்த ஏஐ மாடல்களை ஒருங்கிணைத்து இது வேலை செய்வதால், மிகக் குறைந்த செலவிலும் குறைந்த நேரத்திலும் வீடியோக்களை உருவாக்க முடியும். உதாரணமாக, ஒரு 60 செகண்ட் பிராண்ட் விளம்பரம் எடுக்க ஆகும் ரூ. 10 முதல் 25 லட்சம் செலவை 90% வரை குறைத்து ரூ. 50,000 முதல் 75,000 ரூபாயில் முடிக்க முடியும். பல வாரங்கள் எடுக்கும் வேலையையும் வெறும் 24 மணி நேரத்தில் முடித்துவிடலாம்.

ஸ்பார்க் ஸ்டேஷன் முக்கியமாக மூன்று பிரிவினருக்காக உருவாக்கப்பட்டுள்ளது:

சினிமா இயக்குநர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்கள்: கதை எழுதுவது, ஸ்கிரிப்ட் ரெடி செய்வது, நடிகர் தேர்வு, லொகேஷன் டிசைன், ஸ்டோரிபோர்டு, ஷாட் மேக்கிங், மியூசிக் மற்றும் வசனங்கள் உருவாக்குவது, எடிட்டிங் என அனைத்தையும் செய்வதுடன், வழக்கமான பிரீமியர், ஃபைனல் கட் போன்ற எடிட்டிங் சாப்ட்வேர்களுக்கும் எளிதாக மாற்றி எடிட் செய்துகொள்ளலாம்.

பிராண்டுகள், பிசினஸ்கள், இ-காமர்ஸ் மற்றும் விளம்பர ஏஜென்சிகள்: பல வகையான வீடியோ விளம்பரங்கள், தயாரிப்பு விளம்பரங்கள் மற்றும் வெவ்வேறு மொழிகளுக்கான வீடியோக்களை பல வாரங்கள் காத்திருக்காமல் சில மணி நேரங்களிலேயே தயார் செய்துகொள்ளலாம்.

கிரியேட்டர்கள் மற்றும் இன்ஃப்ளூயன்ஸர்கள்: ரெடிமேட் டெம்ப்ளேட்களைப் பயன்படுத்தி, ஸ்டுடியோ குவாலிட்டி வீடியோக்களை கிரெடிட் முறையில் மிக எளிதாக உருவாக்கிக் கொள்ளலாம்.

## ராகுல் தான் பிரதமர் வேட்பாளராக இருக்க முடியும்.!! தவெக அமைச்சர்கள் யோசித்து பேச வேண்டும்.. வைகோ கருத்து



சென்னை 01, செப்டம்பர் 2026: தமிழக முதல்வராக இருக்கும் விஜய்க்கு, நாட்டின் பிரதமராகும் எண்ணம் துளியும் இல்லை என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். செய்தியாளர்களிடம் பேசிய வைகோ, ராகுல் காந்திதான் பிரதமர் வேட்பாளராக இருக்க முடியும் என்றார்.

முன்னதாக சமீபத்தில் வெளியான தேசிய அளவிலான கருத்துக் கணிப்பு ஒன்றில், நாட்டின் அடுத்த பிரதமர் வேட்பாளருக்கான ரேஸில் தவெக தலைவர் விஜய் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகின. இதனைத் தொடர்ந்து தவெக நிர்வாகிகள், அமைச்சர்கள் சிலர் விஜய் தான் வருங்கால பிரதமர் என்பது போல் கருத்துக்களை பொதுவெளியில் பேசி வந்தனர்.

இது குறித்து பேசிய காங்கிரஸ் அமைச்சர் ராஜேஷ்குமார், ராகுலை பிரதமர் வேட்பாளராக ஏற்காவிட்டால் பொறுப்புகளை துறக்க தயாராவோம், காங்கிரசை சேர்ந்த 2 அமைச்சர்களும் ராஜினாமா செய்வோம் என்றார். விஜய் பிரதமர் என்ற விவகாரம் காங்கிரஸ் - தவெக இடையே மோதலை ஏற்படுத்தி வரும் நிலையில், இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக வைகோ கருத்து தெரிவித்து உள்ளார்.

"நாட்டின் பிரதமராக வேண்டும் என்ற எண்ணம் முதலமைச்சர் விஜய்க்குத் துளியளவும் கிடையாது. அந்தக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் யோசித்துப் பேச வேண்டும். இந்திய அளவில் காங்கிரஸ் கட்சிதான் தலைமையாக இருக்கிறது. அந்த அணியின் வேட்பாளரை தான் பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியும். எனவே ராகுல் காந்தி தான் பிரதமர் வேட்பாளராக இருக்க முடியும். வேறு வழியே கிடையாது" என்று வைகோ குறிப்பிட்டு உள்ளார்.

## மேகதாது அணை விவகாரம்: கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு 3 வார கால அவகாசம்!

சென்னை 01, செப்டம்பர் 2026: மேகதாது அணைக்கு எதிரான வழக்கில் கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்யத் தமிழக அரசுக்கு உச்சநீதி மன்றம் 3 வாரங்கள் அவகாசம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டுவதற்கு எந்தவித அனுமதியும் வழங்கக் கூடாது என்று கோரியும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்குத் திட்டங்களை செயல்படுத்தவும் மதிப்பிடவும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ரத்து செய்ய வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள், இந்த வழக்கில் கூடுதலாக சில ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் விசாரணையை தள்ளிவைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். தமிழக அரசின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், ஆவணங்களை தாக்கல் செய்ய 3 வாரங்கள் அவகாசம் வழங்கி வழக்கின் விசாரணையை ஒத்தி வைத்தனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## சார்மினார் பிர்லாநியூ அல்ட்ரா-பிரீமியம் கூரைகள்: அனைத்துப் பருவங்களிலும் நேர்த்தியாகவும், வலிமையாகவும், கச்சிதமாகவும் திகழும் கூரை.

அரியலூர், 01 செப்டம்பர் 2026: பல தசாப்தங்களாக, ஃபைபர் சிமெண்ட் கூரைத் தயாரிப்புகள் அதன் அடிப்படை அம்சங்களான வலிமை மற்றும் நீடித்த தன்மைக்காக பாரம்பரியமாக மதிக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இன்று இந்தப் பிரிவில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. நீண்டகால செயல்திறனுடன் நீடித்த அழகிய தோற்றத்தையும் ஒருங்கிணைக்கும் கூரைத் தீர்வுகளை வாடிக்கையாளர்கள் அதிகளவில் எதிர்பார்க்கின்றனர். இந்தியாவின் குடியிருப்பு மற்றும் வணிகச் சந்தைகளில், குறிப்பாக அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில், வானிலைத் தாக்கங்களை எதிர்க்கும் திறன், மேற்பரப்பு முடித்தலைப் பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பைக் குறைத்தல் ஆகியவை முக்கிய வேறுபடுத்தும் அம்சங்களாக மாறியுள்ளன. இந்த அம்சங்கள் இனி விருப்பத் தேர்வுகளாக இல்லை; தயாரிப்பைத் தேர்வு செய்வதிலும் வாங்கும் முடிவுகளிலும் அவை அதிகளவில் முக்கிய பங்கு வகிக்கின்றன.




இந்த மாறிவரும் எதிர்பார்ப்புகளை கருத்தில் கொண்டு சார்மினார் பிர்லா-னு அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸ் உருவாக்கப்பட்டுள்ளன. ஃபைபர் சிமெண்டின் அடிப்படை செயல்திறனை, வானிலைத் தாக்கங்களுக்கு வெளிப்படும் போதும் குறையாத கண்கூடாக மேம்பட்ட மேற்பரப்பு தரத்துடன் ஒருங்கிணைக்கும் கூரைத் தீர்வை வாடிக்கையாளர்கள் எதிர்பார்க்கும் குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாடுகளுக்காக இந்த தயாரிப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அல்ட்ரா பிரீமியம் வகையின் முக்கிய சிறப்பம்சமாக அதன் நீர்-வெறுப்புத் தன்மை கொண்ட மேற்பரப்பு அமைந்துள்ளது. கன மழையின் போது, வழக்கமான ஃபைபர் சிமெண்ட் கூரைத் தயாரிப்புகள் மேற்பரப்பு மட்டத்தில் ஈரப்பதத்தை உறிஞ்சுகின்றன; இது காலப்போக்கில் நீர் கசிவு, கட்டமைப்பிற்குள் ஈரப்பதம் மற்றும் வானிலைத் தாக்கத்தால் ஏற்படும் சிதைவு போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுத்து, கூரையின் பயனுள்ள ஆயுட்காலத்தைக் குறைக்கிறது. அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸில் உள்ள நீர்-வெறுப்புத் தன்மை கொண்ட மேற்பரப்பு, இந்த ஈரப்பத உறிஞ்சுதலைக் குறைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; இதன் மூலம் ஈரப்பதம் கட்டமைப்பு மற்றும் மேற்பரப்பு சேதத்தை ஏற்படுத்தக்கூடிய நுழைவுப் புள்ளிகளைக் கட்டுப்படுத்துகிறது.

அதிக ஈரப்பதம் மற்றும் அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் பொதுவாக காணப்படும் மற்றொரு பிரச்சினையையும் ஈரப்பதம் தக்கவைத்தல் ஏற்படுத்துகிறது: கூரையின் மேற்பரப்பில் பாசி உருவாகுதல். அல்ட்ரா பிரீமியம் மேற்பரப்பு சிகிச்சையின் மூலம் ஈரப்பதம் தங்குவது குறைக்கப்படுவதால், பாசி உருவாகி பரவுவதற்கான சூழ்நிலைகள் குறைகின்றன. இதன் மூலம், மீண்டும் மீண்டும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமின்றி, அனைத்து பருவங்களிலும் கூரையின் மேற்பரப்பை மேலும் சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது. இந்த தயாரிப்பு, வழக்கமான ஃபைபர் சிமெண்ட் விருப்பங்களுடன் ஒப்பிடும் போது மென்மையான மேற்பரப்பு முடித்தலை வழங்குகிறது; இந்த வேறுபாடு கண்கூடாகத் தெளிவாகத் தெரியும். மேற்பரப்பு முடித்தல், ஈரப்பத மேலாண்மை மற்றும் ஃபைபர் சிமெண்டின் அடிப்படை செயல் திறன் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு, நீண்ட ஆயுட்காலமும் தோற்றமும் இரண்டும் முக்கியமான தேவைகளாக இருக்கும் திட்டங்களுக்கு அல்ட்ரா பிரீமியம் ஃபைபர் சிமெண்ட் ரூஃப்ஸை பொருத்தமான தேர்வாக ஆக்குகிறது.

## ஆர்.கே. நகர் பகுதியில் பிரிந்து சென்ற மனைவியின் சகோதரி வீட்டுக்கு சென்று ரகளை செய்து மனைவியின் சகோதரியை தாக்கியவர் கைது

சென்னை 01, செப்டம்பர் 2026: சென்னை, கொருக்குப்பேட்டை, அண்ணா நகரில் இந்துமதி, பெ/வ.31 என்பவர் குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், இவரது தங்கை ஜெயந்தி என்பவருக்கும், ஜோதிமணி என்பவருக்கும் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்று, ஜோதிமணி அவரது மனைவி ஜெயந்தியிடம் அடிக்கடி தகராறு செய்து தாக்கி வந்ததால், சமீபத்தில் ஜெயந்தி கோபித்துக் கொண்டு இந்துமதியின் வீட்டிற்கு வந்துவிட்டதாகவும், இந்நிலையில் ஜெயந்தியின் கணவர் ஜோதிமணி கடந்த 28.08.2026 அன்று இரவு இந்துமதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, ஜெயந்தியை பார்த்து, 'உன்னால்தான் என் வாழ்க்கையே போச்சு' என்று கூறி தகாத வார்த்தைகளால் இந்துமதியை கையால் தாக்கி வீட்டின் வெளியே இழுத்து வந்து தாக்கி கீழே தள்ளிய போது, பொதுமக்கள் வருவதைக் கண்டு ஜோதிமணி கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றதாகவும், காயமடைந்த இந்துமதி, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து ஹெச்-6 ஆர்.கே. நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் (பிஎன்எஸ் ஆக்ட்) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் (டிஎன்பிஹெச் டபிள்யு ஆக்ட்) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். ஹெச்-6 ஆர்.கே. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து,



மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஜோதிமணி, வ/33, முனீஸ்வரன் நகர், கொருக்குப்பேட்டை, சென்னை என்பவரை 29.08.2026 அன்று கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி ஜோதிமணி விசாரணைக்குப் பின்னர் சிறி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதி மன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## ஸ்விக்கியின் 'ஃபுட் ஆன் ட்ரெயின்' 2 ஆண்டுகளில் 12 மடங்கு வளர்ச்சி: அதன் சேவை வலையமைப்பு 201 நிலையங்களாக விரிவடைந்துள்ளது

சென்னை, 01 செப்டம்பர் 2026: இந்தியாவின் முன்னோடியான ஆன்-டிமாண்ட் வசதித் தளமான ஸ்விக்கி (ஸ்விக்கி லிமிடெட், என்எஸ்இ: ஸ்விக்கி / பிஎஸ்இ: 544285), தனது 'ரயிலில் உணவு' (ஃபுட் ஆன் ட்ரெயின்) சேவையானது கடந்த 2 ஆண்டுகளில் (ஆகஸ்ட் 2024 முதல் ஆகஸ்ட் 2026 வரை) 12 மடங்கு வளர்ச்சி கண்டுள்ளதாக இன்று அறிவித்தது. பெருநகரங்களை விட இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை சந்தைகளில் இதன் பயன்பாடு இரண்டு மடங்கு வேகமாக வளர்ந்துள்ளது. இது தவிர, ஸ்விக்கி தனது 'ரயிலில் உணவு' சேவையை 2024-ல் 66 நிலையங்களிலிருந்து 201 நிலையங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது.

பயணத்தின்போது ஆர்டர் செய்வதை வேகமாகவும், மேலும் எளிதாகவும் மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்ட இரண்டு புதிய தயாரிப்பு அம்சங்களையும் ஸ்விக்கி அறிமுகப்படுத்தியுள்ளது. முதலாவது 'சர்ச் பை டிரெயின்' ஆகும். இது, பயனர்கள் தங்களின் ரயில் எண் அல்லது ரயில் பெயரைத் தட்டச்சு செய்வதன் மூலம், வழக்கமான உணவக வடிகட்டலைத் தவிர்த்து, தங்களின் குறிப்பிட்ட வழித்தடம் மற்றும் கால அட்டவணையுடன் தொடர்புடைய உணவு விருப்பங்களை உடனடியாகப் பார்க்க அனுமதிக்கிறது. மேலும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட '99 ஸ்டோர் விட்ஜெட்' என்பது செயலியில் உள்ள ஒரு பிரத்யேக மையமாகும். இது, பயணிகள் குறைந்த செலவிலான உணவு விருப்பங்களை விரைவாகக் கண்டறிய உதவுகிறது, இதன் மூலம் நீண்ட பயணங்களில் மலிவு விலையில் உணவருந்துவதை சிரமமின்றிச் செய்ய முடிகிறது.



ரயில் பயணிகளின் மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்கள் குறித்த சுவாரஸ்யமான போக்குகளையும் ஸ்விக்கி பகிர்ந்துள்ளது. ஓராண்டுக்கும் சற்று அதிகமான காலத்தில், பயணிகள் துரித உணவுகள் மற்றும் கார்பனேற்றப்பட்ட பானங்களிலிருந்து ஆரோக்கியமான, புத்துணர்ச்சியூட்டும் உணவு வகைகளுக்கு மாறியுள்ளனர். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், பயணிகள் லஸ்ஸி (+60%), மோர் (+40%), மற்றும் மோஜிட்டோ (+90%) போன்ற பாரம்பரிய மற்றும் புத்துணர்ச்சியூட்டும் பானங்களை விரும்புகின்றனர், அதே நேரத்தில் வழக்கமான கார்பனேற்றப்பட்ட பானங்களுக்கான ஆர்டர்கள் கணிசமாகக் குறைந்துள்ளன. ரயில்களில் பாரம்பரிய மற்றும் பிராந்திய உணவுகளுக்கு மீண்டும் முக்கியத்துவம் திரும்பியுள்ளது, மேலும் தாலி போன்ற முழுமையான உணவுகள் அனைத்து ரயில் ஆர்டர்களில் 65%-க்கும் அதிகமாக உள்ளன. கூடுதலாக, ரசகுல்லாக்களை முன்னிறுத்தி, இனிப்புகளுக்கான ஆர்டர்கள் பல மடங்கு அதிகரித்துள்ளன (+110%).

## மரபுசார் குத்துவிளக்கிற்குப் பதிலாக பிராக்டல் விளக்கு

சென்னை, 01 லயோலா கணிதத்துறை மாணவர்களின் அசத்தல் சாதனை! சென்னை லயோலா கல்லூரியின் கணிதத் துறை சங்கத் துவக்க விழாவில், வழக்கமான குத்துவிளக்கு ஏற்றுவதற்குப் பதிலாக, பிராக்டல் முறையில் உருவாக்கப்பட்ட மாபெரும் 'சியர்பின்ஸ்கி முக்கோண' ஒளிரும் கலைப்படைப்பை ஏற்றி மாணவர்கள் தங்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ளனர். இவ்விழாவைப் பற்றிய விரிவான செய்தித் தொகுப்பு: புதுமையான சிந்தனை லயோலா கணித சங்கத்தின் தலைவர் ஷிபா நீனு டி-யின் சிந்தனையில் உதித்த இந்த புதுமையான யோசனைக்கு, மூன்றாம் ஆண்டு பி.எஸ்சி கணித மாணவர் ஆடம் கில்கிறிஸ்ட் வடிவம் கொடுத்து முன்னின்று வழிநடத்தினார். கணிதத்துறையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒன்றிணைந்து, சிறு ஒளிரும் முக்கோணங்களை இணைத்தல், மின் வயரிங் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்ட பணிகளைத் தங்களின் கூட்டு முயற்சியால் அர்ப்பணிப்புடன் செய்து முடித்து, இந்த மாபெரும் கணித அதிசயத்திற்கு உயிர் கொடுத்துள்ளனர். முக்கிய விருந்தினர் பாராட்டு சென்னை ரிப்பன் மாளிகையின், பெருநகர சென்னை மாநகராட்சி ஐ.ஏ.எஸ் அதிகாரி எச். ஆர். கௌஷிக் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, இந்த ஒளிரும் பிராக்டல் அமைப்பைத் திறந்து வைத்தார். மாணவர்களின் தனித்துவமான கற்பனைத் திறனையும், கூட்டு உழைப்பையும் அவர் மனதாரப் பாராட்டினார். கலைவடிவில் கணிதம் இது குறித்து கணிதத்துறைத் தலைவர் திரு. மரியா ராய் பெலிக்ஸ் கூறுகையில், "பாடப்புத்தகங்களில் உள்ள கோட்பாடுகளை நடைமுறைச் செயல்பாடுகளுடனும், ஆக்கப்பூர்வமான படைப்பாற்றலுடனும் இணைப்பதற்கான துறையின் கூட்டு முயற்சியையே இந்த முன்முயற்சி பிரதிபலிக்கிறது" என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.







(செய்தி உதவி: ஜூவானா ஷாரோன் ஏ, ஆவணச் செயலாளர், கணிதத்துறை, லயோலா கல்லூரி)

# ‘மீசைய முறுக்கு 2’ படத்தின் 5வது சிங்கிள் ‘கலைவாணியே’ வெளியீடு



சென்னை, 01 செப்டம்பர் 2026: ஹிப்ஹாப் தமிழா ஆதியின் இயக்கம் மற்றும் நடிப்பில் உருவாகியுள்ள பெரும் எதிர்பார்ப்புக்குரிய ‘மீசைய முறுக்கு 2’ திரைப்படத்தின் இசைக்கு ரசிகர்கள் மத்தியில் கிடைத்து வரும் வரவேற்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ‘ஆரா 10/10’, ‘பப்பாளி பழமே’, ‘கோயிந்தம்மா’, ‘அடிபோடி’ ஆகிய பாடல்கள் ஏற்கனவே ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து சார்ட் பஸ்டர்களாக மாறியுள்ள நிலையில், தற்போது படத்தின் 5வது சிங்கிளான ‘கலைவாணியே’ பாடல் வெளியாகியுள்ளது.

இந்தப் பாடலை கௌஷிக் கிருஷ்ணா, டி. சத்யபிரகாஷ் மற்றும் ஹிப்ஹாப் தமிழா இணைந்து பாடியுள்ளனர். பாடலுக்கான வரிகளை ஹிப்ஹாப் தமிழா எழுதியுள்ளார். காதல், திருமணம் மற்றும் குடும்ப உணர்வுகளை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள இப்பாடல், படத்தின் கதையோட்டத்தில் முக்கியத்துவம் பெறும் பாடலாக அமைந்துள்ளது.

குறிப்பாக, ‘கலைவாணியே’ பாடலில் ஹிப்ஹாப் தமிழா மற்றும் ரம்யா ரங்கநாதன் கதாபாத்திரங்களின் திருமண இணைவு அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. காதலின் அடுத்த கட்டமாக அமைந்துள்ள திருமண நிகழ்வை மையமாகக் கொண்டு உருவாகியிருக்கும் இந்தப் பாடல், ரசிகர்களுக்கு காதல் மற்றும் குடும்ப உணர்வுகளை ஒருசேரக் கடத்தும் வகையில் அமைந்துள்ளது.

இசைக்கு முக்கியத்துவம் அளித்து உருவாகும் ‘மீசைய முறுக்கு 2’, முதல் பாகத்தின் வெற்றியைத் தொடர்ந்து இன்றைய தலைமுறையினரின் ரசனைக்கு ஏற்ற வகையில் காதல், நட்பு, நகைச்சுவை, குடும்ப உணர்வுகள் மற்றும் உற்சாகமான இசை என அனைத்து அம்சங்களையும் கொண்ட முழுமையான பொழுதுபோக்கு திரைப்படமாக உருவாகியுள்ளது.

‘மீசைய முறுக்கு’ திரைப்படம் வெளியாகி ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, அதன் தொடர்ச்சியான ‘மீசைய முறுக்கு 2’ திரைப்படத்தின் வெளியீட்டு தேதி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள திரையரங்குகளில் செப்டம்பர் 25ஆம் தேதி இப்படம் வெளியாகவுள்ளது.

முதல் பாகத்தின் இசை மற்றும் இளைய தலைமுறையினருடன் ஒன்றிணைந்த அதன் வெற்றியைத் தொடர்ந்து, ‘மீசைய முறுக்கு 2’ படத்தின் பாடல்களும் தொடர்ந்து ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று வருகின்றன. தற்போது வெளியாகியுள்ள ‘கலைவாணியே’ பாடலும் அந்த எதிர்பார்ப்பை மேலும் அதிகரித்துள்ளது.

ஹிப்ஹாப் தமிழா ஆதி இப்படத்தில் கதை, திரைக்கதை, இயக்கம், இசை மற்றும் நடிப்பு என பல்வேறு பொறுப்புகளை ஏற்றுள்ளார். அவருடன் சைத்ரா ஜே. ஆச்சார், கெட்டிகா சர்மா மற்றும் ரம்யா ரங்கநாதன் ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். ஹர்ஷத் கான், கருணாஸ், நாசர், ஆடுகளம் நரேன் மற்றும் ஷா ரா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இசை, காதல், நட்பு, குடும்பம், நகைச்சுவை மற்றும் கொண்டாட்டம் என அனைத்து அம்சங்களையும் ஒருங்கிணைத்து உருவாகியுள்ள ‘மீசைய முறுக்கு 2’, திரையரங்குகளில் ஒரு திரைப்பட அனுபவத்தைத் தாண்டி, ரசிகர்களுக்கு ஒரு இசைக் கொண்டாட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

‘மீசைய முறுக்கு 2’ - செப்டம்பர் 25 முதல் உலகம் முழுவதும் திரையரங்குகளில்!

நடிகர்கள்:

ஹிப்ஹாப் தமிழா, சைத்ரா ஜே ஆச்சார், கேதிகா ஷர்மா, ரம்யா ரங்கநாதன், ஹர்ஷத் கான், கருணாஸ், நாசர், ஆடுகளம் நரேன், கருணாகரன்.

தொழில்நுட்பக் கலைஞர்கள்:

கதை, இயக்கம்: ஹிப்ஹாப் தமிழா, தயாரிப்பு: அவ்னி மூவீஸ் & பென்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட், தயாரிப்பாளர்கள்: குஷ்பூ சுந்தர், ஏ.சி.எஸ். அருண்குமார், இசை: ஹிப்ஹாப் தமிழா, படத்தொகுப்பு: பென்னி ஒலிவர், ஒளிப்பதிவு: பாலாஜி சுப்ரமணியம், கூடுதல் ஒளிப்பதிவு: மாதேஷ் மாணிக்கம், சிஇஓ - பென்ஸ் மீடியா: ஆர். மதன் குஓர், நிர்வாகத் தயாரிப்பாளர்: ஆனந்திதா சுந்தர், கிரியேட்டிவ் தயாரிப்பாளர்: அஸ்வின் ராம், ஆடை வடிவமைப்பு: பூர்ணிமா ராமசாமி, கலை இயக்கம்: வி.எஸ். தினேஷ்குமார், புரொடக்ஷன் எக்ஸிகியூட்டிவ்: பி. பாலகோபி, நடன அமைப்பு: பாபா பாஸ்கர், சந்தோஷ், ரகு தாப்பா, சண்டைப் பயிற்சி: ஆக்ஷன் சந்தோஷ், டிஐ: Knack Studios, கலரிஸ்ட்: பிரசாத் சோமசேகர், விஎஃப்எக்ஸ்: 85எஃப்எக்ஸ், Hocus Pocus, கூடுதல் வசனங்கள்: கரண் கார்க்கி, நிதிஷ் டி, டைட்டில் கார்டு அனிமேஷன்: அஷ்வின் குமார், மார்க்கெட்டிங்: Bonk டிஜிட்டல், புரொடக்ஷன் மார்க்கெட்டிங்: Beatroute, பப்ளிசிட்டி டிசைன்ஸ்: Raghavartz, முடி & மேக்கப் வடிவமைப்பு: வேல்முருகன், காஸ்ட்யூமர்: அருண், ஸ்டில் புகைப்படம்: பி.கே. ராஜா, ஒலிக்கலவை: கண்ணன் கணபத், ஒலி வடிவமைப்பு: ஏ. சதீஷ்குமார், புரொடக்ஷன் கண்ட்ரோலர்: ஹரி வெங்கட் சி, புரொடக்ஷன் மேனேஜர்: விக்னேஷ் ரத்தினம், மக்கள் தொடர்பு: ரியாஸ் கே அஹ்மத், பாரஸ் ரியாஸ், சதீஷ் (எஸ்2 மீடியா)

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# டார்க் காமெடி படத்தை லியோ விஷன் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும் நடிகை நித்யா மேனன்..



சென்னை 01, செப்டம்பர் 2026: ‘நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்’, ‘இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா’ ஆகிய படங்களை தயாரித்த லியோ விஷன் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகும் ‘புரொடக்ஷன் நம்பர் 5’ என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ள புதிய திரைப்படத்தை, நித்யா மேனனின் கேயுரி புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கிறது. இது தொடர்பான அதிகாரப்பூர்வமான அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது.

இயக்குநர் டி கே இயக்கத்தில் உருவாகும் பெயரிடப்படாத திரைப்படத்தில் நடிகை நித்யா மேனன் கதையின் நாயகியாக நடிக்கிறார். ஏ. சக்திவேல் ஒளிப்பதிவு செய்யும் இந்த படத்தின் படத்தொகுப்பு பணிகளை ரிச்சர்ட் கெவின் மேற்கொள்கிறார். ஃபேண்டஸி வித் டார்க் காமெடி ஜானரிலான இந்த திரைப்படத்தை தயாரிப்பாளர் வி எஸ் ராஜ்குமாரின் லியோ விஷன் நிறுவனமும், நடிகை நித்யா மேனனின் கேயுரி புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமும் இணைந்து தயாரிக்கின்றன. இந்த திரைப்படத்திற்கு இயக்குநர் விக்ரம் கே. குமார் கிரியேட்டிவ் புரொடியூசராக பொறுப்பேற்றிருக்கிறார்.

லியோ விஷன்-கேயுரி புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்-நித்யா மேனன்-இயக்குநர் டி கே மற்றும் விக்ரம் கே. குமார் ஆகியோரின் கூட்டணி யில் உருவாகும் இந்த பெயரிடப்படாத திரைப்படம், ரசிகர் களுக்கு வித்தியாசமான திரையரங்க அனுபவத்தை வழங்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட் டிருக்கிறது. இந்த திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

இந்த படத்தை பற்றிய கூடுதல் தகவல்களையும், இப்படத்தில் பணியாற்றும் ஏனைய நடிகர்கள், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் மற்றும் படத்தின் டைட்டில் குறித்த விபரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் என படக்குழுவினர் தெரிவித்து உள்ளனர்.

# சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மானிய கோரிக்கை விவாதத்தின்போது ஆற்றிய உரை



சென்னை 01, செப்டம்பர் 2026: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் தலைவர் தலைமையிலான ஆட்சியில், தமிழ்நாட்டில் இருந்து ஒலிம்பிக் தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்க, சென்னையில் ஒரு இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்டு விளையாட்டுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று, செம்மஞ்சேரியில் 128 ஏக்கரில் 261 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு ‘குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கின்ற பணிகளை, நாங்கள் தொடங்கி இருந்தோம்.

இந்த அரசு, எப்படி பரந்தூர் விமான நிலையத்தை ரத்து செய்ததோ, அதேபோல் இப்போது ‘குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ திட்டத்தையும் ரத்து செய்திருக்கிறது என்று செய்திகள் வந்திருக்கின்றன. அரசின் கவனத்திற்கு ஈர்க்கிறேன். ஏன், இந்த திட்டம் கைவிடப்பட்டது என்று, இந்த அரசைக் கேட்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் தேர்தல் அறிக்கையில், இதைச் சொல்லியிருந்தோம். 128 ஏக்கர் சென்னைக்கு அருகில் கிடைப்பது என்பது சாதாரண விஷயம் கிடையாது. மூன்று இடங்களுக்கு சாத்தியக்கூறு இருந்தது. நாங்களும் டி.பி.ஆர் ப்ராஜெக்ட் எல்லாம் தயார் செய்திருந்தோம். சி.எம்.டி.ஏ சார்பாக ஒரு தனியார் கன்சல்டன்ட் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அந்த கன்சல்டன்ட் ஆய்வின் படிதான் செம்மஞ்சேரியில் ‘ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கலாம் என்று அறிக்கை கொடுத்தார்கள். அதன் பிறகு தொடர்ந்து பல்வேறு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம்.

‘ஸ்போர்ட்ஸ் அசோசியேஷன், ஸ்போர்ட்ஸ் மேன்களுடன் கலந்து ஆலோசனை செய்திருக்கிறோம். ஹை லெவெல் சைட் இன்ஸ்பெக்சனும் நடத்தப்பட்டது. அந்த இன்ஸ்பெக்சனின் அடிப்படையில் பல்வேறு பரிந்துரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

‘குளோபல் ஸ்போர்ட்ஸ் சிட்டி’ அமைக்கின்ற பணியை பேஸ் மேனரில் மூன்று பேஸ்களாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அது இறுதி செய்யப்பட்டது. பேஸ் ஒன்றுக்கான வேலையை எங்களின் தலைவர், அப்போதைய முதலமைச்சராக இருக்கும்போது, கடந்த பிப்ரவரி 18-ஆம் தேதி தொடங்கி வைத்தார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக ‘பி.எம்.எக்ஸ் சைக்கிளிங் டிராக்’, இந்தியாவிலேயே மிகப்பெரிய ‘வாட்டர் ஸ்போர்ட்ஸ் ஸ்பெசிலிட்டி’ என்று 25 விளையாட்டுக்களுக்குத் தேவையான 30 க்கும் மேற்பட்ட உட்கட்டமைப்புகள் அங்கு வர இருந்தன. முதற்கட்டப் பணிகளை 18 மாதங்களில் முடிக்க வேண்டும் என்று அவர்களுக்கு இலக்கு கொடுக்கப்பட்டது. இப்போது நம் அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை கைவிடவில்லை, இதில் சில ஆல்ட்ரேஷன் செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இதை தயவுசெய்து சீக்கிரம் செய்து முடித்தால், விளையாட்டு வீரர்களுக்கு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல வருடங்களாக விளையாட்டுத் துறைக்கு கட்டமைப்புகள் இல்லை என்று சொல்கிறார். பல வருடங்களாக விளையாட்டுத் துறை அமைச்சராக இருந்தவர் நம் அவை முன்னவர் அண்ணன் செங்கோட்டையன் அவர்கள்தான். அவரிடத்தில் அதை அவர் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை ஆற்றினார்.